328

உ

குருநாதன் துணை.

கும்பகோணத்தின் கீழ்பால் உள்ள
தேப்பெருமாள் நல்லூரில்
ஜீவன்முக்தராய் விளங்கிச் சமாதி
யடைந்த

**ஸ்ரீ சாரங்கபாணி**
**சுவாமிகளால்**

அடியார்களுக்கு
அனுக்கிரகிக்கப்பட்ட
உபதேசம்.

# ...ர் பெரியாரின் நல்லுபதேசம்

திருநாகேசுவரம்
போர்டு பாடசாலையின்
ஆசிரியர்
அருணஜடேசனால்
எழுதி
வெளியிடப்பட்டது

...பிரஸ், கும்பகோணம்.

R65
N30
176274

# முன்னுரை.

திருக்குடந்தையின் பஞ்சக்குரோச ஸ்தலங்களுள் ஒன்றாகிய திருநாகேச்சரம் என வழங்கும் சண்பகாரண்ய க்ஷேத்திரத்தின் வடபாலுள்ள தேப்பெருமாள்நல்லூர் என்னும் திருப்பதியில்,

"காமமாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனத்திற் பற்றார், தாமரை இலைத் தண்ணீர்போல் ஜகத்துடன் கூடி வாழ்வர், பாமரர்எனக் காண்பிப்பார் பண்டிதத் திறமை காட்டார், ஊமரும்ஆவர் உள்ளத்து உவகையாம் ஜீவன் முக்தர்"

என்றதின் கருத்து முற்றும் ஒருங்கே அமையப் பெற்று, இல்லறத்திருந்து ஆத்மானந்தஸ்வரூபமாய் விளங்கி கைவல்ய சாக்ஷாத்காரத்தையடைந்த

## ஸ்ரீ சாரங்கபாணி சுவாமிகளின்

அரிய உபதேச மொழியாகும் இந்நூல். இந்நூலின் உட்கோள் (கருத்து) யாதெனின் இன்ப துன்பத்தெளிவே (சுகதுக்கங்களில் ஈடுபட்டும் அதில் தோயாத நிலைமை) ஆத்மஞானத்தை அடைய அடிப்படையாகும், இல்லையேல் எத்தகைய அப்பியாசமும் முடிவாம் மோக்ஷத்தை, அடைவிக்கச்செய்ய இயலாதென்பதே.

மனிதப்பிறவி யெடுத்தார் அடையவேண்டிய ஒருசிறந்த பயனைத் தெரிவிக்கின்றமையால் லோகோபகாரார்த்தமாய் அவ்வுபதேச மொழிகளைத் தொகுத்து இச்சிறு புத்தக வாயிலாய் வெளியிடலாயினேன். அன்பர் பலரின் வேண்டுகோளும் என் அவாவை மிகவும் தூண்டுதல் செய்தது. அன்றியும் என் ஆன்மநண்பர் திருவாளர் கோபாலய்யர் அவர்களும் இந்நன் முயற்சியில் முற்றிலும் உடனிருந்து என்னை ஊக்கினர். இப்பணியில் என்னைச்செலுத்தி இனிது முற்றுவித்த எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைப் போற்றுகின்றேன்.

இங்ஙனம்,

ச. அருணஜடேசன்.

5-MAY 1930
MA

உ

திருச்சிற்றம்பலம்.

# மதிப்புரைகள்.

---

உலகின் உயிர்களனைத்தும் பிறந்ததுதொட்டு, முடிவுறுங்காறும், பல்வேறு தொழிலில் இயங்கிக்கொண்டிருப்பதை நாமெல்லோரும் அறிந்துவருகிறோம். அவைகள் அவ்வாறு முயல்வதெல்லாம், ஏதேனும் ஒரு சிறந்த பயன்கருதியே யாகல்வேண்டும். அப்பயன்தான் யாவதென ஊன்றி உணர்வோமாயின் நமக்கு என்ன தோன்றும்?

துன்பம் ஒழிய-இன்பம் அடைய வேண்டுமென்பதேயாம்.

ஆதலின் அதற்குற்ற காரணங்களையறிந்து உள்ளபடி முயல்வதே அப்பயனை யடைவதற்குரிய வழியாம். அவ்வின்ப துன்பங்கள் நேரும் காரணங்களையும், முயற்சிக்கும் நெறியினையும் இந்நூல் தெளிவாகவும், சுருக்கமாகவும் எடுத்துக்காட்டுகிறது.

இச்சிறு நூல் எளியோர்முதல் வலியோர்வரை யாவருக்கும் இன்றியமையாததான பொருளைத் தன் கண்கொண்டு விளங்குகின்றது. அதனோடு பெண்டிரும், சிறுவரும் கூடப்படித்துணர்ந்து பயனடையும்படி மிகவும் எளியநடையில் எழுதப்பட்டிருப்பது இன்னும் பாராட்டற்குரியதாகும்

இவ்வளவு சிறந்த இந்நூல் ஒரு பெரியார்பால் பல சமயத்துப் பல படக்கேட்டிருந்த அரும்பொருளின் சாரங்களைத்தொகுத்து முறைப்படுத்தி எழுதியதாகும். இவ்

176274
600 008



வாறு உலகிற்கு உபகாரமாக எழுதி இதனை வெளியிட்ட ஆசிரியர் திருவாளர் அ. அருணஜடேச முதலியார் ஆவர். இப்பெருந்தகை, எமது சேக்கிழார் பெருமான் திருப்பணி செய்யப்பெற்றதும் மூவர் தேவாரம் பெற்றதும் இன்னும் பல சிறப்பினதுமாகிய திருநாகேச்சரம் என்னும் திவ்விய தலத்தில் உள்ளவர். ஈசுவரபக்தி, அடியார்பக்தியிற் சிறந்தவர். பிறவிப்பிணியற நோற்றுவரும் பெற்றியர். இத்தகையார், இன்னும் இதுபோலும் பலவிதத்திலும் தமிழகத்துக்குற்ற உதவிகள்புரிந்து நீடுநிலவுக என எமையாளுடைய பிரானும் முருகவேளின் திருவடிகளை முழுமனதுடன் போற்றுகின்றேன்.

கவர்ண்மெண்டு காலேஜ்,
கும்பகோணம்.
1—2—30.

இங்ஙனம்,
பண்டித, அ. கந்தசாமிபிள்ளை
தமிழ்ப்பண்டிதர்.

திருநாகேச்சுரம் போர்டு பாடசாலையின் ஆசிரியர் திருவாளர் அருணஜடேச முதலியார் அவர்களால் எழுதி வெளியிடப்பெற்ற "உபதேசம்" என்ற புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். அது ஸ்ரீ சாரங்கபாணி சுவாமிகள் என்ற பெரியார் அருளிய நல்லுபதேச மொழிகளைத் தன்னகத்துக்கொண்டு விளங்குதலானும், எளிய நடையில் இனிமையாக எழுதப்பெற்றிருத்தலானும், படிப்போர்க்குப் பெரிதும் பயன்பட்டு அவர்களது அறியாமையைப்போக்கி உயர்நிலையை எய்துவிக்கும் என்பது எனது கருத்து.

வாணாதுறை ஹைஸ்கூல்
கும்பகோணம்.
31—1—30.

இங்ஙனம்,
T.V. சதாசிவ பண்டாரத்தார்

350

R65
N30

தேப்பெருமாள்நல்லூரில் அமர்ந்திருந்த ஸ்ரீலஸ்ரீ சாரங்கபாணி சுவாமிகளிடத்து இடையறு அன்புபூண்டொழுகும் ஸ்ரீ ச. அருணஜடேச முதலியாரவர்கள், அவ்வாசிரியர்மாட்டு பன்னெடுநாட் பழகிப்பெற்ற அருளுபதேசங்களால் அடைந்த நலத்தை உலகும்பெற்று இன்புறவேண்டுமென்னும் விழைவால் எழுதிய அரும்பெரும் நெறிகளனைத்தும் பந்நீதி நூல்களையும் ஓதி உணர்ந்த தெளிவுரைபோல, சிறந்த பொருளமைந்து யாவரும் எளிதினுணர இலகுநடையிலமைந்ததோர் வசனநீதி நூலாயிருத்தலின், இஃது இத்தமிழ்நாட்டு நம்மனோர்க்கு பெரிதும் இம்மை மறுமைப்பயன்களைத் தரத்தக்க நூலாய், எம்மதத்தினரும் விரும்பி கைக்கொள்ளத்தக்கதாய் இலகுமென்பதற்கு ஐயமில்லை.

திருவாவடுதுறை
ஆதீனம் ஹைஸ்கூல்,
திருவிடைமருதூர்.
29—1—30.

இங்ஙனம்,
க. சோ. டாலசுப்பிரமணியக்
கவிராயர்,
தமிழாசிரியர்.

உ

ஸ்ரீ சாரங்க ஸத்குருவே நம:

## கடவுள் ஸ்துதி.

---

பெருவெளியாய் ஐம்பூதம் பிறப்பிடமாய்ப் பேசாத பெரியமோனம், வருமிடமாய் மனமாதிக்கெட்டாத பேரின்பமயமாய் ஞானக், குருவருளாற் காட்டிடவும் அன்பரைக்கோத் திறவிழுங்கிக்கொண்டப்பாலுந், தெரிவரிதாய்க் கலந்தெதெந்தப் பொருளந்தப் பொருளிணையாம் சிந்தை செய்வாம்.

---

## குரு ஸ்துதி.

நிலமண்டில ஆசிரியப்பா.

ஐம்புலப் பகைவரை அடக்கும் நன்னெறியினை
இன்புறும் நல்உப தேசமாய் இயம்பி
தண்ணருள் சுரந்து தடுத்தெமை யாண்ட
அண்ணல் சாரங்கன் அடிபணி குவமே

குருநாதன் துணை.

அல்லவைதேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

REGISTRAR OF BOOKS
5 - MAY 1930
MADRAS

# 1. கடவுள்.

---

கலியின் கொடுமையால் கர்மமே நிறைந்து கடவுளை மறந்து நிற்கும் இந்நாளில், கடவுள் ஒருவர் உண்டென்ற திடநிச்சயம் பெறவேண்டியது நமது முதற்கடமையாகும். அதை எவ்வாறு உணர்கிறோமெனின், விக்கிரகங்களைக் கண்ணால் பார்ப்பதையும், பலரால் துதிக்கப்படுவதைக் காதால் கேட்பதையும், புத்தகங்களில் எழுதப்பட்டிருப்பதை வாக்கால் படிப்பதையுங்கொண்டு உணர்கிறோம். அன்றியும், அவரால் நிகழ்த்தப்பட்டு, நிகழ்ந்துகொண்டிருக்கிற விஷயங்களைக்கொண்டு, நம்மனப் பூர்வமாகக் கடவுள் ஒருவர் உண்டென்ற நிச்சயம் கொள்ளல்வேண்டும்.

பரமாத்மாவின் பரம அணுவாய் ஜீவர்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்கள். அத்தகைய அணுப்பிரமாண மானிட அறிவால், அணுவாம்சங்களைமட்டும் அடக்கியாள முடியுமேயொழிய, பரந்த பஞ்சபூதங்களின் செயல்களை அடக்கியாள முடியுமா? சிறிதும் இயலாது. உதாரணமாக சிறு ஆற்றை அடைக்கலாம், சமுத்திரத்தை அடைக்க முடியுமா? குறுகிய காற்றைத்தடுக்கலாம், பெருங்காற்றைத் தடுக்க யாராலாகும்? சிறுவெளியை மறைக்கலாம், பெரிய ஆகாயத்தை மறைப்பது எங்ஙனம்? இவைபோன்ற விஷயங்களை எண்ணி எண்ணிப்பார்ப்போமாயின், இவ்வரும்

பெருங்காரியங்களையெல்லாம் சாதிக்கவல்ல வல்லான் ஒருவன் இருக்கவேண்டுமென்பதை, யார்தான் ஒப்புக்கொள்ளாதிருக்கலாகும். அவ்வல்லான் "சாதிகுலம், பிறப்பு இறப்பு, பந்தம் முக்தி அருவுருவத்தன்மை, நாமம்; ஏதுமின்றி எப்பொருட்கும் எவ்விடத்தும் பிரிவறநின்றியக்கம் செய்யும் ஜோதியாம்தூவெளி" என்றபடி ஒருமதத்தில் சார்ந்தவனல்லன். எம்மதத்திற்கும் சம்மதமாயிருப்பவன். அவனை யார் யார் எந்தெந்தவிதமாய் ஆசிரயித்தாலும், அவரவர்கட்கு அவரவர்கள் இஷ்டப்படி இருந்து அருள் செய்கின்றான். இதை கீதை அத்தியாயம் 7. சுலோகம் 21-ல் காண்க. அவ்வாறின்றி ஒருமதமே விசேஷப்பட்டதாயின் அம்மதத்தினர் தவிர ஏனைய மதத்தினர், விசேஷக்குறைவை அடைந்திருக்கவேண்டும். அனுபவத்தில் அவ்வாறில்லை. ஹிந்துமதம், மகம்மதியமதம், கிரிஸ்துமதம், பௌத்தமதம் முதலிய எல்லா மதங்களிலும் செல்வர்களுண்டு, பக்தர்களுண்டு, ஞானவான்களுண்டு, தீர்க்கதரிசிகளுண்டு, ஆகவே, எம்மதம் உயர்வு? எம்மதம் தாழ்வு? எல்லா மதங்களிலும் விளங்குபவர் ஒரே கடவுள்.

## 2. கடவுள் வழிபாடு.

---

கடவுள் ஒருவர் உண்டென்ற நிச்சயம் வந்தபின்னர்,

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது "

எனத் தமிழ்மறை மொழிவதால், அவரை அடையக்கூடிய வழியை ஆராயவேண்டும். அவை பலசால் பலவிதமாய்ச் சொல்லப்பட்டிருப்பினும், தாற்காலிகமாக யாவரும் சுலபமாய் அனுசரிக்கக்கூடியதும், முடிவில் புருஷார்த்

தத்தை அடைவிக்கச்செய்யற்பாலதுமான, ஒருமுறையைக் கைக்கொள்வது உசிதமான காரியமாகும்.

அதாவது, ஆத்மா பரமாத்மாவின் அம்சமாகையால் ஆத்மா திருப்தி அடைந்தால், பரமாத்மாவும் ஒருவாறு திருப்தி அடையுமெனக் கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆத்மாவை (ஜீவனை) த்திருப்திசெய்வது எப்படி, ஏராளமாய்த்திரவியம்கொடுத்தலாலா, அன்னமிடுவதாலா, இவைபோன்ற பிறவற்றுலா, அன்று மற்றெவ்வாறெனின் திரவியம் வேண்டியகாலத்து அன்னமிட்டும் பயனில்லை. அன்னம் வேண்டியகாலத்துத் திரவியம்கொடுத்தும் பயனில்லை. உதாரணமாக ஒருவன் ஒருபாலைவனத்தில் மரண தாகமடைந்து சாகுந்தறுவாயில் இருக்கும் சமயத்தில், பவுன் பவுனைக்கொட்டினாலும் அவனுடைய தாகம்தீருமா? ஒருவன் கொடியவியாதியால் பீடிக்கப்பட்டுத் துன்புறும் சமயத்தில் ரத்னாபரணமும், பட்டாடையும் நிரம்ப அணிவித்தாலும் அவனது நோய் தீருமா? அங்கு பயன்தருவன தண்புனலும் திவ்ய ஔஷதமும் அன்றே.

ஆகவே ஜீவனைத் திருப்திசெய்வது சந்தர்ப்பத்திற்கேற்ப நடத்துவதேயல்லாது வேறு விலை முதலிய மதிப்பைப்பொறுத்ததல்ல. ஆகையால் யார் யாருக்கு எந்தெந்தச்சமயத்தில், எவை எவை தேவையோ அவற்றை மனோவாக்குக்காயத்தால் பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பாராது.

"ஒல்லும்வகையால் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்"

என்றபடி இயன்றஅளவு கொடுத்து உபகாரம்செய்வதே, திருப்தி செய்விக்கும் மார்க்கமாகும். இதுவே புண்ணியம் எனப்படும். இதற்கு எதிரிடையானதே பிறர்க்கு அபகாரம்செய்வது) பாவம் எனப்படும்.

## 3. கர்ம லக்ஷணம்.

புண்ணிய பாபங்களின் பலனாக சுவர்க்க நரகானுபவம் கிடைப்பது பிறிதோர் உலகத்தில் எனக்கருதுவதால், பின்னர் நடப்பதை, யார் கண்டார்களென, நவீன நாகரிகத்தில் ஈடுபட்டவர்கள், சத்கர்மானுஷ்டானங்களைவிட்டுத் தங்கள் மனம்போனபடியெல்லாம் திரிந்து, தங்கள் வாணாளை வீணாளாகக்கழித்து, நற்கதிபெற இயலாதவர்களாய் ஒழிவர். அவ்வாறெண்ணாமல், இவ்வுலகில் அனுபவிக்கப்படும் சுகமெலாம் புண்ணியபலன் என்றும், துக்கமெலாம் பாபபலன் என்றும், உணரவேண்டும். ஜன்ம ஆரம்பமுதல் மரண பரியந்தம் அனுபவிக்கப்படும் சுகதுக்கங்கள், முறையே முன்ஜன்மத்தில் செய்த புண்ணிய பாபங்களின் பலனே ஆகும். ஒவ்வொருவரும் இதைத் தம்தம் சுவானுபவத்தில் தினே தினே கண்டிருந்தும், ஏற்படும் துன்பமெல்லாம், தாம் முன்செய்த துஷ்கிருத்தியத்தின் பலன்என உணரா திருப்பதுபற்றியே, மேலும் மேலும் பாபகிருத்தியங்களைச் செய்து பாழாகின்றமைக்குக் காரணமாகின்றது. துஷ்கிருத்தியம் பாபத்திற்கு ஆளாக்கிவிடும் என்று சொன்னால், பாபத்தைக்கண்டது யார், புண்ணியத்தைக்கண்டது யார், என வெகு இலகுவாய்ப் பகர்ந்துவிடுகின்றனர்.

“ அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தானிடை ”

என்றபடி ஒருவன் பல்லக்கு ஏறுவதையும் அவனைப் போன்ற மற்றொருவன் பல்லக்கு சுமப்பதையும் கண்ணாரக் காணுங்கால், பாபம் ஏது புண்ணியம் ஏது என்றுசொல்வது எவ்வகையாற்றானும் ஒத்துக்கொள்ளற் பாலதன்று அன்றோ. காரணம் இல்லாது காரியம் நிகழுமா?

ஆனதால் பிரதிநிமிஷமும் நமக்கேற்படும் சுகதுக்கங்களை அனுபவிக்குங்கால், மறதியில் ஈடுபட்டு, நேர்ந்ததை அனுபவிப்பது என்பதில்லாமல், இது புண்ணியத்தின் பலனன்றோ, இது பாபத்தின் பலனன்றோ என்று ஊகித்து உணரவேண்டும். அவவாறு உன்னி உணர்வோமாயின், விவேகம் சிறந்து துஷ்கிருத்தியம் செய்யாதொழிந்து, புண்ணியமேலீட்டால், நற்கதி அடைந்து நலம்பெறுவோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆயின் அத்தகைய உணர்வைத் தலையெடுக்கவொட்டாது தடைப்படுத்துவது யாதெனின், ராகத்துவேஷாதி குணங்களே ஆகும்.

## 4. ராகத்துவேஷாதிகள்.

அவைபாவன:— 1. ராகம், 2. துவேஷம், 3. காமம் 4. குரோதம், 5. லோபம், 6. மோகம், 7. மதம், 8. மச்சரம், 9. ஈரிஷை, 10. அசூயை, 11. டம்பம், 12. தற்பம் 13. அகங்காரம்.

இவற்றின் இயல்பும், மறுதலைக்கு மேற்கோளும்.

1. ராகம்:— பரஸ்திரீகமனம்.

(மேற்கோள்) பிறன்மனை நோக்காத
பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு

(கருத்து) பரஸ்திரீகளைப் பாராமலிருப்பதே உத்தமர்கள் நடை.

2. துவேஷம்:— அபகாரம் செய்தவர்களுக்கு பதில் அபகாரம் செய்ய நினைத்தல்.

176274

(மேற்கோள்) திறனல்லதற் பிறர்செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

(கருத்து) பிறர் நமக்குத் தீங்கிழைத்தால், அவர்களிடம் அனுதாபப்படுவதன்றி, பதில் தீங்கிழைக்கலாகாது.

3. காமம்:— புத்ர, மித்ர, களத்ர, தன, தான்யாதிகளை மேன்மேலும் விருத்திசெய்யவேண்டுமென்ற எண்ணம்.

(மேற்கோள்) அவாஎன்ப எல்லாஉயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவா பிறப்பு ஈனும்வித்து.

(கருத்து) ஆசையே பிறவிக்கு வித்து.

4. குரோதம்:— தான்செய்யும் காரியங்களுக்கு விரோதம் செய்பவர்களின்மீது உண்டாகும் வேகம்.

(மேற்கோள்) தன்னைத்தான் காக்கில்
சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

(கருத்து) கோபத்தை அடக்கவேண்டும், இல்லையேல் அது கொடுந்தீமை விளைக்கும்.

5. லோபம்:— பிசினறித்தனம்

(மேற்கோள்) கொடுப்பதூம், துய்ப்பதூம்
இல்லார்க்கு அடுக்கிய
கோடி உண்டாயினும் இல்.

(கருத்து) கொடுத்தலும் அனுபவித்தலும் இல்லாத செல்வம் பயனற்றது.

6. மோகம்:— தான் சம்பாதிக்கும் பொருள்களின்மேல் ஏற்படும் பிரியம்.

(மேற்கோள்) ஒருபொழுதும் வாழ்வது அறிபார்கருதுப
கோடியும் அல்ல பல

(கருத்து) ஆயுள் நிலையற்றதாயிருக்க எண்ணும் எண்ணங்
கள் அனந்தமாயிருக்கின்றன.

7. மதம்:— ஐசுவரியத்தால் கர்வித்து கிருத்தியா கிருத்
தியம் தெரியாதிருத்தல்.

(மேற்கோள்) நெருநல்உளன் ஒருவன் இன்று இல்லைஎன்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு.

(கருத்து) நேற்றிருந்தவர் இன்றிருப்பாரென்பது நிச்சய
மில்லை.

8. மச்சரம்:— சுகமாயிருப்பவர்களைப் பார்க்க மனம்
ஸஹியாமை.

(மேற்கோள்) அவ்வத்து அழுக்காறு உடையானை செய்யவள்
தவ்வையை காட்டிவிடும்.

(கருத்து) பொறாமையுடையவனை லக்ஷ்மியும் பொறாமைப்
பட்டு விலகுவாள்.

9. ஈரிஷை:— தனக்குவந்த துக்கம் பிறருக்கும் வரவே
ண்டுமென்ற எண்ணம்.

(மேற்கோள்) அழுக்காறெனை ஒருபாவி திருச்செற்று
தீயுழி உய்த்துவிடும்.

(கருத்து) பொறாமை இம்மையில் தரித்திரத்தையும் மறு
மையில் நரகத்தையும் கொடுக்கும்.

10. அசூயை:— தான் நன்றாயிருக்க, பிறர் கெட்டுப்போக
நினைத்தல்.

(மேற்கோள்) பிறர்க்கு இன்னா முற்பகல்
செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்.

(கருத்து) நினைக்கக்கேடு தனக்கு.

11. டம்பம்:— பிறர் மெச்சத் தானதருமம் செய்தல்.

(மேற்கோள்) மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறம்
ஆகுல நீரபிற

(கருத்து) மனத்தூய்மையில்லாது செய்யும் தருமம் தன்னைப்
புகழச் செய்ததாகும்.

12. தற்பம்:— எல்லா ஸம்பத்துக்களும் நமக்கிருக்கிறது
ஒருவருமநமக்கு நிகரில்லைஎன்ற எண்ணம்.

(மேற்கோள்) யான் எனது என்னும் செருக்கு
அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

(கருத்து) ஆணவத்தை விட்டவன் அறனுலகம் சேர்வான்.

13. அகங்காரம்:— நீயா எனக்கு புத்திசொல்ல வருகிறது
என்று வருகிற சித்தவிருத்தி.

(மேற்கோள்) அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்துவிடும்.

(கருத்து) அடக்கம் சுவர்க்கத்தையும் அடங்காமை நரகத்
தையும் கொடுக்கும்.

## 5. நேர்மைநெறி.

அன்றியும் உலகானுபவத்தில் ஈடுபடுங்கால், எது செய்வது எதுசெய்யாதொழிவது என்ற சங்கை சிற்சில சமயங்களில் எழலாம். அப்போது.

"நினக்கொருவன் செய்யுமா நீவிரும்பிற்
றன்னோன் றனக்கு நீசெய்தல் தரும்"

என்னும் விதியைப் பிரயோகம்பண்ணினால், இன்னது செய்வதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றென விளங்கும்.

## 6. புண்ணிய பாவம்.

அதாவது பிறர் நமக்கு எதுசெய்தால் திருப்தியோ, அதை நாம் பிறருக்குச்செய்வது புண்ணியம். பிறர் நமக்கு எதுசெய்தால் அதிருப்தியோ அதை நாம் பிறருக்குச் செய்வது பாவம்.

புண்ணிய பாவத்தைப்பற்றிப் பலநூல்கள் பலவிதமாய்ப் பகர்வனவாயினும் அவற்றை நம் சிற்றறிவைக்கொண்டு எளிதில் தெரிந்துகொள்ளற்குறிய உபாயம் இதுவே. ஆகவே பாபச்செயல்களை ஒழித்து புண்ணியச் செயல்களைக் கைப்பற்றவேண்டும். ஏனெனின் இப்புண்ணிய பாவங்களிரண்டே நம்மைப்பற்றித் தொடர்வது. இதை, "அத்தமும்வாழ்வும் அகத்துமட்டே, விழிபம்பொழுக, மெத்தியமாதரும் வீதிமட்டே, விம்மிவிம்மி இருகைத்தலைமேல் வைத்தழுமைந்தரும் சுடுகாடுமட்டே, பற்றித்தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே."

என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கால் உணர்க. மேலும்

வஞ்சித்தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோமென்று மகிழன்மின் — வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவது அறிவு.

என்பதை உன்னிக்கடவுள் அறிவாரென எச்சமயத்தும், எவர்க்கும், எவ்வகைத்தீங்கும், இழைக்காதிருக்க வேண்டும்.

## 7. பிறவிக்கு வித்து.

மிற்க இவ்விராகத் துவேஷாதி குணங்கள் விரிவில் பதின்மூன்றாயிருப்பினும், சுருங்கக்கூறுமளவில் ராகம், துவேஷம் அதாவது ஆசை, கோபம் என்னும் இரண்டாயடங்கும். இக்கருத்துக்கொண்டே,

"அவாஎன்ப எல்லாஉயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவா பிறப்பு ஈனும் வித்து.
மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்.

என பொய்யாமொழியும் புகல்கின்றது. ஆதலின் ஒருவன் பிறவித்துன்பத்தினின்றும் விடுபட எண்ணினால் ஆசை, கோபம் இரண்டையும் அகற்றவேண்டும். ஆனது பற்றியே "வேண்டாம் விருப்பும் வெறுப்பும் அந்தவில்லங்கத்தாலே விளையும் ஜனனம்" எனத்தாயுமானவரும் கூறியுள்ளார். இக்கருத்தையே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும் கீதை 5-வது அத்யாயம் 23-வது சுலோகத்தில் உபதேசிக்கின்றார்.

# 8. அநுபவ மார்க்கம்.

176274

ஆனல் இது எவ்வாறு ஸாத்தியம் என்பதுதான் கவனிக்கவேண்டிய விஷயம். உப்பும் உறைப்பும் இல்லாவிடில் எப்படி உணவு சுவையடையாதோ அப்படியே ஆசை, கோபம் இல்லாவிடில் பிரபஞ்சம் உருவாகமாட்டாது. இவை இரண்டும் அற்ற எவரும் பிரபஞ்சத்திற்கு அருகராகார். என்றால், இவ்விரண்டையும் விலக்கவேண்டும் இல்லையேல் மோக்ஷத்தை அடைவது இயலாது, என ஆன்றோர் அருளியது அபத்தமா? ஒருகாலும் இல்லை அது உண்மையினும் உண்மையே.

ஆயின் அவற்றில் ஈடுபடவேண்டிய மார்க்கம் தெரியாது மயக்கமடைவதனலேயே, நாம் சீர்பெற வழியில்லாது தாழ்வடைந்து தவிக்கின்றோம்.

R65 A130

உதாரணமாக, கத்தி கூரானது வெட்டுந்தன்மையுள்ளது என்றால் அதை நன்முறையில் உபயோகிக்கத்தெரியாமல் கையை அறுத்துக்கொள்ளலாமா? அறுப்பதே அதன் குணம் என்னலாமா? அதை உபயோகிக்கத்தெரிந்த ஒருவன் மாதுரியமான பழங்கள் முதலியவற்றைப்பகிர்ந்து நாவிற்கு நற்சுவை விளைவித்துக்கொள்ளலாமல்லவா? நெருப்புபட்டால் எரித்துவிடும், தொட்டால் சுட்டுவிடும் என்றால் பார்மீது பலரைப் பல்லாயிரம் மைல் இழுத்துச் செல்லும் நீராவியை உண்டுபண்ண, அது காரணமாயிருக்கவில்லையா? இந்நீராவியால் அடையும் பலன்களுக்கு ஒரு அளவு சங்கியையும் உண்டோ! அத்தனை நன்மைகளுக்கும் காரணமாயிருப்பது தீங்கிழைக்கற்பாலதெனக்கருதும் அக்னி அன்றோ. அப்போது அதன்மீது யாதுகுற்றம் சும

த்தலாகும்? இவைபோலவே தோஷ முள்ளதாய்க் கருத ப்படும் ஆசை, கோபம் இவற்றின் தன்மையும்.

ஆசையில்லாவிடில் பிரபஞ்சத்தில் எந்தப்பிராணியும், எந்தக்காரியத்தையும் செய்ய இயலாது. ஆசையிருப்ப தனாலேயே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வித்தையில் மிகச் சிறந்த பண்டிதராகின்றனர். அத்தலைகய புத்திமானால் விளையும் பலன்கள் அளவிடற்பாலனவல்ல.

ஆசையில்லாவிடில் ஜேம்ஸ்வாட் நீராவியையும், கொலம்பஸ் அமெரிக்காவையும் நமது இந்திய சகோதரர் ஜே' ஜகதீசச்சந்திரபோஸ், செடிகொடிகள் மனிதரைப்போலவே சுகதுக்கமுடையன என்னும் உண்மையையும், இவர்கள் போன்ற ஏனையோர் பிறவற்றையும் கண்டுபிடித்திருக்க முடியுமா?

மேலும் பரமாத்மாவிடத்தில் ஜீவாத்மாவிற்கும், குருவினிடத்தில் சிஷ்யனுக்கும், பிதாவினிடத்தில் புத்ரனுக்கும், பர்த்தாவிடத்தில் பார்யைக்கும் உண்டாகும் ஆசையானது ஆசைகூடாதெனச் சொல்லுகிறபடி தோஷத்தை விளைவிக்குமா? நிர்த்தோஷமானதேயன்றோ.

அவ்வாறே துர்ஜ்ஜனனிடம் ஸஜ்ஜனனும், அயோக்கியனிடம் யோக்கியனும், துராசாரனிடம் சிஷ்டனும், தூர்த்தையிடம் பதிவிரதையும் வெறுப்படைவது, வெறுப்புவேண்டாம் என்ற மொழிக்கு உரித்தாகுமா? ஆகாது இத்தகைய வெறுப்படைவது நியாயமேயன்றோ. இதன் உண்மையைக் கண்டறியவேண்டியதுதான் முக்கியமான விஷயம்.

சிற்சில விஷயங்கள், தோற்றத்திலும் பெரும்போக்கான நோக்கத்திலும் குற்றமுடையன போலக்காணப்படினும், அவைகுணமுடையனவே (குற்றமற்றவையே) இதை உணராதார் எவரும் இல்லை. அதை ஒருவாறு விவரிப்போம். ஒருவன் படுகாயப்பட்டு துன்புறுங்காலத்தில் இரணவைத்தியர் அவனது காயத்தை சோதித்து அவன் கதறக்கதற அறுத்துத் தோஷங்களை அகற்றி மருந்து போடுகிறார். கத்தியால் ஒருவனை அறுப்பது குற்றமென்றால், இவர் இந்நோயாளியை அறுத்தது குற்றமாகுமா?

குழந்தை கூக்குரலிடக்கையையும், காலையும் பிடித்துக்கொண்டு தாய் குழந்தைக்கு மருந்து புகட்டுகிறாள். இது குழந்தையை ஹிம்ஸித்ததாகுமா? இல்லை. இவ்வாறே உபாத்தியாயர் பிள்ளைகளைத் தண்டிப்பதும், நீதிபதி குற்றவாளிக்கு மரணதண்டனை விதிப்பதும், குற்றமல்லாதிருப்பது காண்க. அவ்வாறு குற்றமல்லாதிருக்கக் காரணம் யாதெனின், சுயநலம் கருதாது நடத்தலேயாம்.

ஆசை, கோபம், காமகுரோதம், சுகதுக்கம், சீதோஷ்ணம், இன்பதுன்பம் என்பன யாவும் ஒரே கருத்துக் கொண்டனவே.

ஆகவே உலகநடையில் நாம் பழகிவருங்கால், ஆசை கோபங்களினால் விஷயாதிகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் மேற்சொல்லியபடி தன்னலம்கருதாது நடப்போமாயின், அவற்றில் கலந்தும், கலவாதவர்கள் ஆவோம். இந்நடையில் ஆசைகோபங்களில் ஈடுபடுவதால் உண்டாகும் தோஷம் விளையாது. இதுதான் **தாமரை இலைத்தண்ணீர் போல் ஜகத்துடன் கூடிவாழ்வதென்பது.**

இதுவே ஞானவாசிஷ்டம் சிகித்துவசன் கதையில் விரிவாய்க் கூறப்பட்டிருக்கின்றது

இந்நடையே மோக்ஷசாதனம் எனத் திருவாய்மொழியும்.

"நன்றாய்ஞானங் கடந்துபோய்
நல்லிந்திரிய மெல்லாமீர்த்
தொன்றாய்க்கிடந்த வரும்பெரும்பா
ழுலப்பிலதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்ப துன்பங்கள்
செற்றுக்களைந்து பசையற்றா
லன்றே யப்போதேவீ
டதுவேவீடு வீடாமே"

என்னும் பாசுரத்தில் பகர்கின்றது. இவ்வாறு நடப்பதுதான் ஸாத்தியமேயொழிய, குணங்களில் சம்பந்தப்படாமலே இருப்பதென்பது பொருந்தாது. அதுபற்றியே,

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார். "
என ஆன்றோரும் கூறியுள்ளார்.

## 9. நிஷ்காம கர்மம்.

இதை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும் கீதையில் விரிவாய்க் கூறியிருக்கின்றார். நிஷ்காம கர்மம் என்பது பலனைக்கோராது கர்மத்தைச்செய்வதேயல்லாது, கர்மத்தைச் செய்யாமலே விட்டுவிடுவதன்று. கர்மத்தைச்செய்யாமல் விட்டுவிடுபவன் கர்மப்பிரஷ்டனாவான்.

மேலும் ஒருவன் பொறுமையை வகிக்கக்கருதி குழந்தை எரியும் விளக்கைப் பிடிக்கப்போகையில், அதட்டுகலாகிய கோபக்குறியைக்காண்பிக்காது மௌனம்சாதிப்பது பொருந்துமா? கோபக்குறியைக் காண்பிக்கவல்லவோ வேண்டும். இல்லாவிடில் குழந்தை கையைச் சுட்டுக்கொண்டு வாதனைக்கு அல்லவா ஆளாகும்?

அதே குழந்தை கையைச் சுட்டுக்கொண்டுவிட்டால், முன்போல் கோபக்குறியைக் காண்பிக்காது, அன்பையல்லவோ காட்டி சிகிச்சை செய்யவேண்டும்.

ஆசை, கோபம் விலக்கப்படவேண்டியவையாயினும் இவ்வாறு காலமறிந்து உபயோகிக்காவிடில் குற்றமே ஆகுமன்றோ? இதை,

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமையானும் கெடும்.
பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.
என்ற குறள்களால் உணர்க.

## 10. உபதேச உண்மை.

இந்நடையை எவ்வாறு கைக்கொள்வதெனின், விஷயாதிகளில் நம்மனம் இழுக்கப்படுங்கால் நினக்கொருவன் செய்யுமா நீவிரும்பிற், றன்னேன் தனக்கு நீ செய்தல் தகும் என்னும் நேர்மை நெறியை உபயோகித்தும், தன்னலம்கருதாது நடந்தும், சுகம்வந்தபோது தன்னைமறந்து அதில் ஆழ்ந்துபோகாது.

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது"

என்ற ஆன்றோர் வாக்குப்படி கடவுளின் கருணையால் வந்ததென்றும், துக்கம் வந்தபோது கிலேசப்படாமல்

'நன்று ஆங்கால் நல்லவாக் காண்பவர் அன்று ஆங்கால், அல்லற்படுவது எவன்."

என்றபடி இது நாம் முன்செய்த வினையின்பயன், இதை விலக்க எவராலும் இயலாது வாங்கினகடனைக் கொடுத்துத்தீர்ப்பதுபோல், இதை அனுபவித்து ஒழித்து விச்ராந்தி அடைவதே வழி என்று சமாதானத்தோடு அனுபவிக்கவும் வேண்டும் இதுவே நாம் கைக்கொள்ளவேண்டிய நடை.

## 11. முடிப்புரை.

R65
M38

---

இது இகபரம் இரண்டிலும், அளவற்ற நன்மை அளிக்க வல்லதானதாலும், லௌகிக முறைக்கு எவ்வித முரண்பாடும் இல்லாமல், எம்மதத்தினரும், எவ்வகுப்பினரும் எவ்விடத்தும் எக்காலத்தும், எளிதில் அனுஷ்டிக்கத்தக்கதானதாலும், இதை எல்லோரும் கைக்கொண்டு மனிதப் பிறவியின்பயனாகிய பெரும்பேறு பெறுவோமாக, எல்லாம் வல்ல இறைவன் திருவருளும் நம்மை இவ்வழியிற் செலுத்தியருள்புரிவதாகுக.

குருபாதம் துணை.

முற்றும்.

176274

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

காமம், வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெட கெடும் நோய்.

ஆசை, கோபம், அஞ்ஞானம் இவை மூன்றும் விலகினால் பிறவித்துன்பம் நீங்கும்,

காமமாவது:— பிறருடைய மனது ஸம்மந்தமான மானம் (கௌரவம்) அவமானம் (அகௌரவம்) திரவிய ஸம்மந்தமான லாபம், நஷ்டம், சரீர ஸம்மந்தமான சுகம், துக்கம் (சௌகரியம், அசௌகரியம்) இவைகளைச்சிறிதும் கவனியாது, தன்னுடைய மனது ஸம்மந்தமான கௌரவம், திரவிய ஸம்மந்தமான லாபம், சரீர ஸம்மந்தமான சுகம் இவைகளையே பெரிதும்பாராட்டி, தன் அபிப்பிராயப்படி நடக்கவேண்டும் என்று எண்ணும் **விருப்பம்.**

வெகுளியாவது:— மேற்கண்ட விருப்பப்படி பிறர் நடவாதபோது, அவர்களுக்கு ஏற்படக்கூடிய மனத்துக்கம், திரவியநஷ்டம், சரீர அசௌகரியம், முதலியவைகளால், தான் விரும்பியபடி, நடவாமலிருக்கக்கூடும், அவ்வாறு நடவாமலிருப்பது சிற்சில சமயங்களில, நமது நன்மையின் பொருட்டேயும் ஆகும், என்பதைச் சிறிதும் கவனியாது தன் எண்ணப்படி நடவாததைமட்டும் கருதி பிறர் மீது உண்டாகும் **வெறுப்பு.**

மயக்கமாவது:— விவேகத்திற்கு இது நினைக்கத்தக்கதல்ல, வசனிக்கத்தக்கதல்ல, செய்யத்தக்கதல்ல, எனத் தெரிந்திருந்தும், மனத்தினது வலுவால், அவ்விவேகத்தை மறைப்பது.

இவற்றை அவிவேகத்தில், (மறதியில்) ஆட்படாமல், விவேகத்தையே (நினைப்பையே) பற்றி நிற்பது, என்னும் பிரயத்தனத்தால், போக்கவேண்டும்.

தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலிதரும்.

ஓம்